# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

*************

## ஊடக அறிக்கை

**இந்தியாவில் ஊடக முகாமைத்துவம் குறித்த விசேட பயிற்சிகளை நிறைவு செய்த இலங்கையின் 60 ஊடகவியலாளர்கள்**

இந்தியாவின் ஹைதராபாத்தில் உள்ள டாக்டர் எம்.சி.ஆர் மனித வள அபிவிருத்தி நிறுவகம் – தெலுங்கானா (MCRHRD) வில் ஊடக முகாமைத்துவம் தொடர்பாக நடைபெற்ற ஒருவார கால விசேட பயிற்சி திட்டத்தில் இலங்கையின் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் அதிகாரிகள் இரு குழுக்களாக கலந்துகொண்டிருந்தனர். முதலாவது தொகுதி 30 பேர் 2026 ஜனவரி 26-31 காலப்பகுதியிலும் இரண்டாவது தொகுதி 30 பேர் 2026 பெப்ரவரி 16-21 வரையிலும் இப்பயிற்சித்திட்டத்தில் பங்கேற்றிருந்தனர். தொழில் நிபுணத்துவத்தினை வலுப்படுத்துவதிலும், வளர்ந்து வரும் உலகளாவிய ஊடக பரப்பில் அச்சு, இலத்திரனியல், டிஜிட்டல் மற்றும் சமூக ஊடகங்களில் பங்கேற்பாளர்கள் மேம்பட்ட திறன்களுடன் பணியாற்றுவதையும் குறித்த இரு பயிற்சித் திட்டங்களும் இலக்காகக்கொண்டிருந்தன.

2. இந்திய அரசாங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த இந்த திட்டங்கள், ஊடக தொழில்நுட்பம், செய்தி கூடங்களின் நிலைமாற்றங்கள், ஆட்சித் தொடர்புகள், மற்றும் கோட்பாட்டு அடிப்படையிலான ஊடகவியல் உள்ளிட்ட விடயங்களில் அண்மைய அபிவிருத்திகள் தொடர்பாக இப்பயிற்சியில் கலந்துகொண்டவர்களுக்கு நடைமுறை தெளிவூட்டல்களை வழங்குவதை இலக்காக கொண்டிருந்தன. அச்சு, ஒளிபரப்பு மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் உள்ளிட்ட துறைகளில் இலங்கையின் பாரிய ஊடக நிறுவனங்களது பிரதிநிதிகள் இப்பயிற்சிகளில் கலந்துகொண்டிருந்தனர். தலைமைத்துவ அபிவிருத்தி, ஆட்சி சார் பயிற்சி மற்றும் தொழில்முறை நிபுணத்துவத்துக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முதன்மையான பயிற்சி நிறுவனமாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ள MCRHRD சமகால தொடர்பாடல் சவால்களை எதிர்கொள்வதற்கும், பொது விவாதத்தை வடிவமைக்கும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப செல்நெறிகளுக்குமான நற்பெயரைக் கொண்டுள்ள ஒரு நிறுவனமாகும்.

3. நிபுணர்கள் தலைமையிலான விரிவுரைகள், கலந்துரையாடல் அமர்வுகள், விளக்க காட்சிகள், குழுநிலை பயிற்சிகள், கள விஜயங்கள் ஊடாக இரு குழுக்களையும் சேர்ந்தோர் சிறந்த நேரடி கற்றல் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டிருந்தனர். பங்கேற்பாளர்கள் அறிவு ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் திறன்களைப் பெறுவதை உறுதி செய்யும் வகையில் இந்த அமர்வுகள் வடிவமைக்கப்பட்டன. அணுகுமுறை திறன்கள் மூலம் மனித திறனை மேம்படுத்தல்; செயற்கை நுண்ணறிவு உட்பட ஊடகங்களில் புதிய மற்றும் நவீன தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் மாற்றம் மற்றும் தரவு அடிப்படையிலான அறிக்கையிடல்; தவறான/பிழையான தகவல் மற்றும் பிரசாரத்தை எதிர்கொள்ளல், நல்லாட்சியில் சமூக ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கான ஒளிப்பதிவு முறைமைகள்; ஊடகங்களுக்கும் மக்கள் தொடர்புகளுக்கும் இடையே நம்பிக்கையை உருவாக்குதல்; நெருக்கடி முகாமைத்துவத்தில் தொடர்பாடல் சவால்கள் மற்றும் தொழில்முறை நெறிமுறைகள் மற்றும் நேர்காணல்களுக்கான தயார்நிலை உள்ளிட்ட தொனிப்பொருட்களில் இப்பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

4. அனுபவ ரீதியான கற்கையின் ஒரு பகுதியாக இரு தொகுதியினரும் ஹைதராபாத் மற்றும் அயல் பிராந்தியங்கள் முழுவதும் கலாசார விஜயங்களை மேற்கொண்டிருந்தனர். வரலாற்றுச் சிறப்பு மிக்க Old City இல் உள்ள சர்மினார் மற்றும் இந்தியாவின் முன்னணி புத்தாக்க நிறுவனமான T Hub ஆகியவற்றுக்கான நேரடி விஜயங்கள் மூலம் நாட்டின் புத்தொழில் நிறுவனங்கள் குறித்த உள்நோக்குகளை அவர்கள் பெற்றிருந்தனர். இந்தியாவின் உயர்வான பாரம்பரியம், புத்தாக்க சூழல், ஜனநாயக மரபுகள் தொடர்பாகவும்

பிராந்தியத்தின் புத்த மரபுகள் குறித்தும் அவர்கல் ஆழமான புரிதல்களைப் பெற்றிருந்தனர்.

5. 2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின்போது அவரால் அறிவிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட ஆளுமை விருத்தி திட்டத்தின் கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. ஏற்கனவே இலங்கைக்காக இந்தியாவால் அறிவிக்கப்பட்ட இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு திட்டம் (ITEC) போன்ற ஏற்கனவே உள்ள திட்டங்களுக்கு மேலதிகமாக இலங்கை அதிகாரிகளுக்காக மேலதிக 700 தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சி ஆசனங்கள் இதன்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்துடன் நல்லாட்சிக்கான தேசிய மையம் மற்றும் இலங்கையின் அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் ஆகியவற்றிற்கு இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் கீழ் 300 சிவில் சேவை அதிகாரிகள் வருடாந்தம் பயிற்சி பெறுகின்றனர். அதன் அடிப்படையில் இந்தியாவால் விஸ்தரிக்கபட்டுள்ள இந்த ஆளுமை விருத்தி பங்குடைமை ஊடாக ஒவ்வொரு வருடமும் 1000 இலங்கையர்கள் நன்மையடைகின்றனர்.

6. இந்த நிகழ்ச்சித்திட்டமானது இன்றைய வேகமாக வளர்ந்து வரும் தகவல் கட்டமைப்பில் டிஜிட்டல் மாற்றம் தகவல் தொடர்பு ஆகியவற்றிற்கு வினைத்திறனுடன் பதிலளிக்க ஊடக நிபுணர்களை தயார்படுத்தும் வகையில், உரிய நேரத்தில், பொருத்தமான மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களாக பரவலாகக் கருதப்படுகின்றது.

***

கொழும்பு
24 பெப்ரவரி 2026.